அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 11/2016

எனது இல: EST-6/LEAVE/03/3125
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ
அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2016.05.31

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்

**2016 றமழான் (ராமசான்) காலத்தில் விசேட விடுமுறை**

இம்முறை றமழான் (ராமசான்) மாதம் 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆம் திகதி ஆரம்பமாகி 2016 ஆண்டு யூலை மாதம் 05 ஆம் திகதி முடிவடைய உள்ளதால் இக் காலத்தில் முஸ்லிம் உத்தயோகத்தர்களுக்கு தொழுகையிலும் மதவழிபாடுகளிலும் கலந்து கொள்ளக் கூடிய ஒழுங்குகளைச் செய்யுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

02. தொழுகைகளும் மதவழிபாடுகளும் நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும்.

* மு.ப. 03.30 முதல் மு.ப. 06.00 வரை
* பி.ப. 03.15 முதல் பி.ப. 04.15 வரை
* பி.ப. 06.00 முதல் பி.ப. 07.00 வரை
* பி.ப. 07.30 முதல் பி.ப. 10.30 வரை

03. இக்காலத்தின் போது அவ் உத்தயோகத்தர்கள் சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளக்கூடியதாக வேலை நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் விசேட லீவு அங்கீகரிக்கப்படலாம்.

04. மேலும் றமழான் (ராமசான்) பெருநாளில் இறுதித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னதாக அரச சேவை கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் கடமையாற்றும் தகைமையுடைய முஸ்லிம் உத்தயோகத்தர்களுக்கு விழா முற்பணம் வழங்கத் தயவு கூர்ந்து நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்./ ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு